OS: 656/2018

Date: 13.09.2022

பெயர் : சண்முகம்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்</u>

எனது தாத்தா சின்னபையன், முருகன் இருவரும் அண்ணன், தம்பிகள். 2ம் பிரதிவாதி கோவிந்தனின் அப்பா பெயர் முருகன். முருகனுக்கு முதல் மகள் சின்னம்மாள். சின்னம்மாள் இறந்த பின்னிட்டு அவருக்கு வாரிசுகள் மாரியப்பன், கனகரத்தினம். இதில் கனகரத்தினம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். கனகரத்தினத்திற்கு அவரது மனைவி செல்வியும், 2 மகன்களும் உள்ளார்கள். மேற்படி 2 மகன்களை இவ்வழக்கில் நான் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், பெண் வாரிசுகளுக்கு சீர்வரிசைகள் செய்யப்பட்டுவிட்டதால் அவர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. சீர்வரிசைகள் செய்யப்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. முருகனுக்க 2வது மகளாக குழந்தையம்மாள் என்பவர் பிறந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். குழந்தையம்மாளுக்கு கோவிந்தம்மாள் என்ற மகள் உயிருடன் உள்ளார். மகன்கள் பழனிசாமியும், சண்முகமும் உயிருடன் உள்ளார்கள். அவர்களையும் நான் இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான், பெண் வாரிசுகளுக்கு சீர்வரிசைகள் செய்யப்பட்டுவிட்டதால் அவர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. சீர்வரிசைகள் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. முருகனின் 3வது மகள் பெருமாயி உயிருடன் உள்ளார் என்றால் சரிதான், அவரையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா சின்னபையனுக்கும், முதல் மகள் பிறந்து இறந்துவிட்டார். மேற்படி முதல் மகளுக்கு சின்னமுத்து என்ற மகன் இருந்தார், அவர் விபத்தில் இறந்துவிட்டார். சின்னமுத்துவின் வாரிசுகளான வெங்கடேசன், ஏழுமலை என்ற இரு மகன்கள் உள்ளார்கள். இவர்களையும் நான் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. சின்னமுத்துவிற்கு 2 மகள்கள் உள்ளார்கள், புவனேஸ்வரி, மகேஸ்வரி உள்ளார்கள், அவர்களையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. எனது தாத்தா சின்னபையனின் 2வது மகள் குழந்தையம்மாளும் முன்பே இறந்துவிட்டார். அவருக்கு கனகராஜ், தங்கவேல் என்ற 2 ஆண் வாரிசுகள் உள்ளார்கள். அவர்களையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. 3வது மகள் சின்னம்மாளும்

இறந்துவிட்டார். மேற்படி சின்னம்மாளுக்கு சின்னதம்பி என்ற ஆண் வாரிசு பிறந்து இறந்துவிட்டார், பெண் வாரிசுகள் யார் யார் என்று தெரியவில்லை. எனது தந்தை 2008ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது தாயார் 2004ம் ஆண்டு இறந்துவிட்டார். என்னுடன் பிறந்த சகோதரிகள் நால்வர் அவர்கள் பெயர்கள் முறையே சரோஜா, ருக்மணி, சாரதா, பூபதி. இதில் 2 சகோதரிகள் சரோஜா, ருக்மணி இறந்துவிட்டார்கள். அவர்களுக்கும் வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி எனது சகோதரிகள் இருவரையும், இறந்துபோன சகோதரிகளின் வாரிசுகளையும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது சகோதரிகளுக்கு நல்ல முறையில் சீர் செய்ததால் கட்சி சேர்க்கப்படவில்லை. எனது சகோதரிகளை இவ்வழக்கில் வாதிகளாகவோ, பிரதிவாதிகளாகவோ கட்சி சேர்க்கவில்லை. இவ்வழக்கில் கோவிந்தன் ஒரு பதிலுரை தாக்கல் செய்துள்ளார், அவர் இறந்த பின்னிட்டு அவரது வாரிசுகள் 5, 6, 7 பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள், அதை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த பதிலுரையில் பெண் வாரிசுகளை கட்சி சேர்க்கவில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பதிலுரையில் சொன்ன பின்னிட்டும் நான் அவர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் பெண் வாரிசுகளை கட்சி சேர்க்காததற்கு காரணம் அவர்களுக்கு சீர் செய்துவிட்டதால் கட்சி சேர்க்கவில்லை, பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரைக்கு பதில் பதிலுரையாவது தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 29.08.2005 தேதியில் எனது தந்தையும், 1ம் பிரதிவாதி சேர்ந்து ச.எண்.37/13ல் 5 செண்ட் நிலத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, நான் வாரிசு இருக்கும்போது எனக்கு தெரிந்திருக்கும். எனது தந்தைக்கும், 1ம் பிரதிவாதி வீரமுத்துவிற்கும் அவர்களது காலத்தில் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டுவிட்டதால் தனித்தனியாக பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 70 ஆண்டுகளுக்கு முன்பே எனது தாத்தா சின்னபையனும், முருகனும் பாகம் பிரித்துக்கொண்டதால் அவர்கள் பெயருக்கே தனித்தனியாக பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அனுபவம் மாறியுள்ளது, பட்டாவும் மாறியுள்ளது. பட்டா பெறப்பட்டுள்ள நிலங்களுக்கு அனுபவமானது மாறுபட்ட உள்ளது என்ற விவரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, நான் ஒட்டுமொத்த பரிகாரமாக பட்டா சரியாக வழங்கப்படவில்லை என்றுதான் பரிகாரம் கேட்டுள்ளேன். நான் எனது தரப்பில் வா.த.சா.ஆ.1 முதல் 4 வரை ஆவணங்களாக பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி பட்டா குறித்து வருவாய் கோட்டாட்சியரிடம் ரத்து செய்ய மேல்முறையீடு ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆம், மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வருவாய் துறையில் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை, மாவட்ட ஆட்சியருக்குதான் மனு அனுப்பியுள்ளேன். நான் தாவாவில் 1.16.50 ஏர்ஸ்க்குத்தான் பரிகாரம் கேட்டுள்ளதாக உள்ளது என்றால் சரியல்ல, ஒட்டுமொத்தமாக 126.50 ஏர்ஸ்க்கு பரிகாரம் கேட்டுள்ளேன். தாவாவில் சொத்து விவரத்தில் 1.16.50 ஏர்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது சரியானது என்றால் சரியல்ல, அது தவறுதலாக உள்ளது. வருவாய் துறையினர் தனித்தனியாக அனுபவம் செய்ததால்தான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சின்னதாத்தா முருகன் 07.11.1933 ல் 2 ம் பிரதிவாதியின் தாயார் அய்யம்மாளுக்கு 90 ½ செண்ட் பழைய சர்வே எண் போட்டு எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி அய்யம்மாள் பெயருக்கு தனி பட்டாவாக பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. அய்யம்மாளுக்கு கோவிந்தன் ஒரே மகன்தான் என்றால் சரிதான். கோவிந்தன் வாரிசுகள் 5, 6, 7 பிரதிவாதிகள் சொத்தில் இருந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான், அவர்கள் வீடு கட்டியபோது நான் ஆட்சேபனை செய்தேன். கோவிந்தன் வாரிசுகள் தான் வீட்டில் குடியிருந்து வீட்டு வரி, சொத்து வரி, குடிநீர் வரி, மின் கட்டண வரிகள் செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான், பட்டாவில் அவர்கள் பெயர்கள் இருப்பதால் அவர்கள் கட்டி வருகிறார்கள். அய்யம்மாள் இறந்தபோது 2ம் பிரதிவாதியின் நிலத்தில் புதைக்கப்பட்டுள்ளது என்றால் எங்கள் 3 குடும்பத்திற்கும் மூத்தவர் என்பதால் நாங்களும் சரியென ஒப்புக்கொண்டு பஞ்சாயத்து ரோட்டு ஓரம் உள்ள நிலத்தில் வைத்தோம். அந்த நிலம் கோவிந்தனின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான், ஆனால் யாரும் முறையாக பாகம் பிரித்துக்கொள்ளவில்லை, அவரவர் கையினை காட்டி நிலங்களை அனுபவித்து வந்தார்கள். அமுதா காலமான பின்னிட்டு மேற்படி அய்யம்மாள் இறந்த பகுதியிலேயே இறுதி காரியம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அய்யம்மாள் கணவர் முருகனையும் அய்யம்மாளுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தில்தான் அவர் இறந்தபின்னிட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கோவிந்தனுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில்தான் முத்து மாரியம்மள் கோவில் 3 அடி சிலை வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலானது கோவிந்தன் குடும்பத்தினர் மட்டும் ஆடி பூஜை

செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, 3 குடும்பமும் சேர்ந்துதான் ஆடி பூஜை விழா நடத்துவோம். கந்தசாமி எனது தந்தைக்கு பிரிந்த சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எனது தந்தை 50 ஆண்டுகளுக்கு முன்பு வீடு கட்டினார்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**